RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# சேற்றில் மனிதர்கள் நாவல்வழி இராஜம் கிருஷ்ணனின் சமூகப் பார்வை

மு. நிஷா [அ, *], சு. சுசா [அ]

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயராய்வுத் துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை-600032, தமிழ்நாடு, இந்தியா

# Rajam Krishnan's Social Perspective Through the Novel Settril Manithargal

M. Nisha [a, *], S. Susa [a]

[a] PG Tamil & Research Department, Chellammal Women's College, Guindy, Chennai-600032, Tamilnadu, India

* Corresponding Author: nishacwc23@gmail.com

Received: 28-11-2025
Revised: 28-02-2026
Accepted: 02-03-2026
Published: 16-03-2026

Check for updates

**ABSTRACT**

Setrril Manithargal is a social novel written by Rajam Krishnan in 1982. The novel is set in the Thanjavur and Nagapattinam districts, where Communist ideologies deep rooted then. In this novel, Rajam Krishnan focuses on the lives of oppressed Pallar community whose primary occupation was agriculture. It explores themes such as Caste based discrimination, Caste hierarchy, Communist movements, Police oppression, and Liberation of Women. Through these themes, it reflects the everyday life and hardships of marginalized agricultural families in Tamil Nadu during the 1980s. The novel clearly reveals Rajam Krishnan's deep social concern and her commitment to portraying social realities through literature.

**KEY WORDS:** Rajam Krishnan, Keezhvenmani Massacre, Caste Hierarchy, Oppressed Community, Caste In India, Inter-Caste Marriage.

## முன்னுரை

கீழ்த்தஞ்சை என்று கேட்டவுடன் நம் நினைவை நெருடுவது வெண்மணிப் படுகொலை. கூலி உயர்வு கேட்டுப் போராடிய பட்டியலின விவசாயிகளைக் குடும்பத்தோடு எரித்தழித்த பண்ணை முதலாளிகளின் சாதிய வெறிச்செயலைக் கடந்த திசம்பர்த் திங்கள் 25-ஆம் நாள் நினைவுகூர்ந்தோம். தஞ்சையில் சாணிப்பால் கொடுமை, சவுக்கடி என ஆதிக்க சாதியினரால் ஒடுக்கப்பட்ட விவசாயக்கூலி மக்கள் அனுபவித்த கொடுமைகள் பலவாகும். கம்யூனிசத் தோழர்கள் உழைக்கும் மக்களை ஒன்றுதிரட்டி, தொடர் போராட்டங்களை நடத்தி சாதிய வன்கொடுமைகளிலிருந்து மக்களை மீட்டனர். இந்நிகழ்வுகளுக்குப் பிறகான தஞ்சை மண்ணையும், மக்களையும் களமாகக்கொண்டு 'சேற்றில் மனிதர்கள்' நாவலை இராஜம் கிருஷ்ணன் ஆக்கியுள்ளார். தோழர் சண்முகத்தையும், அவரது மகள் காந்திமதியையும் இந்நாவலின் முதன்மைப் பாத்திரங்களாக அமைத்து, கூலி உயர்வுப் போராட்டத்திற்குப் பிறகான விவசாய மக்களின் வாழ்வையும், பெண் விடுதலை எழுச்சிக் காலகட்டத்தையும் இராஜம் கிருஷ்ணன் உயிரோட்டத்துடன் காட்சிப்படுத்தியுள்ளதைக் கட்டுரைக்கும் முகமாக விளக்கமுறை அணுகுமுறையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## சாதிய ஏற்றத்தாழ்வு

சேற்றில் மனிதர்கள் நாவலில், ஒடுக்கப்பட்ட விவசாயச் சமூக மக்களான பள்ளர் இன மக்களின் வாழ்வு காட்டப்படுகிறது. கம்யூனிஸ்ட் சண்முகத்தின் தாயும் தந்தையும் பண்ணையடிமைகளாக இருந்தவர்கள். சண்முகம் நில உச்சவரம்புச் சட்டத்தின் மூலமாக விவசாய நிலம் பெற்று, சொந்த நிலத்தில் விவசாயம் செய்து ஊர்த் தலையாரியாக இருப்பவர். அவரது பிள்ளைகளான கோபாலுவையும், காந்திமதியையும் கல்வி கற்க வைத்திருப்பவர். இவ்வாறு மூன்று தலைமுறையினரும் இந்நாவலின் பாத்திரங்களாக அமைந்துள்ளனர்.

உழைக்கும் மக்களை அடிமைப்படுத்தி அவர்தம் உழைப்பைச் சுரண்டி மேல்வர்க்கத்தினர் முன்னேற உருவாக்கப்பட்டதே சாதிய அமைப்பு. மிகக் குறைந்த கூலிக்கும், உணவுக்கும் பண்ணையார்களின் நிலத்தில் அடிமைப்பட்டுக் கிடந்த கொடுமையைச் சண்முகத்தின் தந்தை, "நாளெல்லாம் நெத்தமும் சதயும் தேச்சு, பச்சை சிரிக்கப் பாப்பம். ஆனா அந்த மணி, நம்ம வயித்துப் பசிய அவிக்கல. அந்த உழப்பு நம்ம குடிய உசத்தல. இது நமக்கு உரிமைன்னு தெரியாது. மாறா, நாம இப்பிடி நண்டு நத்தயப் புடிச்சித் தின்னிட்டு, திருட்டு மணியள்ளிட்டு, திருக்கைச் சாட்டை அடிவாங்கிட்டு இருக்கத்தாம் பெறந்தோம்னு நெனைச்சிருந்தம்" (சேற்றில் மனிதர்கள், ப.61) என்று கூறுகிறார்.

உழைப்புச் சுரண்டல் மட்டுமின்றி உடல் அளவிலும், மன அளவிலும் இத்தொழிலாளர்கள் அனுபவித்த கொடுமைகள் பலவாகும். பண்ணை முதலாளிகளை எதிர்த்துப் பேசியவர்களை சவுக்கால் அடித்தும், மாட்டுச்சாணத்தைக் கரைத்து வாயில் ஊற்றியும் கொடுமைப்படுத்தினர். இதனை, நாவலில் களப்போராளியாக வரும் விசுவநாதன், "அது ஒரு காலம். சாட்டையடி வாங்கிட்டு, சாணிப்பால் குடிச்சிட்டு ஏன்னு கேக்கத்தெரியாம இருந்தவங்கள மனிசங்கன்னு சொல்லித் தட்டி எளுப்பவே ரத்தம் குடுக்கவேண்டி இருந்துச்சு" (மேலது, ப.29) என்று நினைவுகூறுகிறார்.

மக்கள் இயக்கங்களின் தொடர் போராட்டங்களால் இக்கொடுமைகளுக்கு எதிரான சட்டங்கள் இயற்றப்பட்டாலும், சாதியத்தின் பிடியிலிருந்து ஒடுக்கப்பட்ட மக்கள் முழுமையாக மீளவில்லை என்பதை நாவலில் இராஜம் கிருஷ்ணன் காட்சிப்படுத்துகிறார். ஊர்ப்பொதுவில் அம்மன் கோவில் அருகில் குடியிருக்கவும், இறந்தவர் பிணத்தை மேல்சாதியினரின் வயல் வழியாக எடுத்துச் செல்லவும் பட்டியலினத்தவருக்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

கீழ்வெண்மணிப் படுகொலைக்குச் சில நாட்களுக்கு முன்னர், அன்றைய நாகப்பட்டின தாலுக்கா செயலாளர் திரு. மீனாட்சி சுந்தரம், தமிழக முதலமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் தஞ்சையிலும் நாகையிலும் பட்டியலின மக்களுக்கு எதிராக ஆதிக்க சாதியினர் நிகழ்த்திய கொடுஞ்செயல்களைப் பட்டியலிட்டு, அரசு விரைந்து பட்டியலின மக்களைக் காக்கவேண்டுமெனக் கோரிக்கை வைத்திருந்தார். அவரது கடிதத்தில், "அரிஜன மக்கள் சொத்துக்களுக்கும் உயிருக்கும் பாதுகாப்பற்ற நிலையுள்ளதையும் பெண்கள் மானபங்கப்படுத்தப்படுவதையும் நிலப்பிரபுக்களும் அவர்களுடைய அடியாட்களும் போலீசை வைத்துகொண்டே தாக்குதல் நடத்திய சம்பவங்களும் எழுதி இருந்தேன். வடுகச்சேரி கிராமத்தில் இருஞ்சூர் ராமுபிள்ளை தலைமையில் மற்றும் சுமார் 29 பேர்களுடன் பயங்கர ஆயுதங்களுடன் சேரிக்குள் புகுந்து வீடுகளில் இருந்த அனைத்தும் கொள்ளையடித்துக்கொண்டு சென்றுவிட்டார்கள்" (நின்று கெடுத்த நீதி, பக்.53-56) என்று எழுதியிருப்பதன்மூலம் அன்றைய தஞ்சையில் பட்டியலின மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறையையும், அவற்றுக்குக் காவல்துறையினர் துணைபோன கொடூரத்தையும் அறியமுடிகிறது.

## சாதிய அடுக்குகள்

இந்தியாவில் வேரூன்றியிருக்கும் சாதியம் வெறுமனே இரு பிரிவினருக்கு இடையிலான ஏற்றத்தாழ்வாக இல்லாமல், பல அடுக்குகளைக் கொண்ட அமைப்பாகச் செயல்படுகிறது. மேல்சாதியினரின் ஆதிக்கத்துக்கு ஆளாகும் இடைநிலைச் சாதியினர், தனக்குக் கீழ் அடுக்கில் இருக்கும் மக்களின்மேல் தங்களின் ஆதிக்கத்தச் செலுத்துகின்றனர். இதனை இராஜம் கிருஷ்ணன் இந்நாவலில் பேசுபொருளாக்கியிருக்கிறார்.

ஆதிக்க சாதியினரால் தன் சமூகம் இன்றும் ஒடுக்கப்படுவது குறித்த விழிப்புணர்வும், தன் பிள்ளைகள் கல்வி கற்று முன்னேற வேண்டும் என்ற எத்தனிப்பும் தோழர் சண்முகத்திடம் இருக்கிறது. ஆனாலும், தனது வயலில் வேலை செய்யும் பறையர் சமூக மக்களைக் கீழ்மக்களாகப் பார்க்கிறார். அவரது இளைய மகள் அம்சு பறையர் இனத்தைச் சேர்ந்த வடிவேலுவை விரும்புவதை அறியும்போது, ஆத்திரப்பட்டு மோசமாக வசைமொழிகிறார். இதை வடிவேலு தனது தோழனான தேவுவிடம் கூறுகையில், "நம்ம சனங்களுக்கு நமக்குக்கீழ நாலுமனுசன் கைகட்டி சேவகம் பண்ணனும்ங்கற உணர்வு ரத்தத்தோட ஊறிப்போயிருக்கு. பொதுவுடைமைச் சித்தாந்தமெல்லாம் பேசி ஊறினாக்கூட, தனக்குன்னு வாரப்ப, எந்த மனுசனும் பொஞ்சாதியையேனும் குறைஞ்சபட்சம் அடிமைன்னு நினைச்சு அதிகாரம் பண்ணாம இருக்கிறதில்ல" (சேற்றில் மனிதர்கள், ப.117) என்று தேவு நம் சமூகத்தில் புரையோடிப்போயிருக்கும் ஆதிக்க மனப்பான்மையைச் சாடுகிறான்.

## சாதி மறுப்புத் திருமணம்

பெண்ணினத்தை அடிமைப்படுத்தி வைத்திருப்பதில்தான் சாதியத்தின் வேர் ஆழ்ந்துள்ளது. பெண்ணைச் சுயசாதிக்குள் திருமணம் செய்து கொடுத்து, சுயசாதிக் குழந்தையைப் பெற்றெடுக்க வைப்பதன் மூலமே சாதியின் கண்ணி அறுபடாமல் காப்பாற்றப்படுகிறது. ஆகவேதான் 'சாதி மறுப்புத் திருமணம்' சாதி ஒழிப்பில் பயனளிக்கக்கூடிய தீர்வாக அண்ணல் அம்பேத்கர் அவர்களால்

முன்வைக்கப்பட்டது. சாதி மறுப்புத் திருமணத்தின் மூலமாக மட்டுமே சக மனிதனைச் சகோதரனாகக் காணும் நிலையினை எய்த இயலும் என்று, "The real remedy for breaking Caste in inter-marriage. Nothing else will serve as the solvent of Caste. Fusion of blood can alone create the feeling of being kith and kin" (Annihilation of Caste, pg.31) அண்ணல் குறிப்பிடுகிறார்.

பள்ளர் இனத்தைச் சேர்ந்த அம்சுவும் பறையர் இனத்தைச் சேர்ந்த வடிவேலுவும் காதலித்து இணையர் ஆவதை இந்நாவலில் காணமுடிகிறது. இவ்வகையில் சாதி மறுப்புத் திருமணத்தை இராஜம் கிருஷ்ணன் ஆதரிப்பதாவே கொள்ளலாம். சாதிய அடுக்கின் உச்சத்தில் இருக்கும் பிராமணச் சமூகத்தில் பிறந்த ஒரு பெண், சாதிய ஆதிக்கத்துக்கு எதிராகப் பேசி, சாதி மறுப்புத் திருமணத்தை ஆதரித்துத் தன் படைப்புகளில் எழுதியிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. ஆதிக்கம் செலுத்தும் இடத்தில் இருப்பவர்கள் ஆதிக்கத்தை எதிர்த்துச் செயல்படுவது மிகவும் முக்கியமானதும், சாதிய அமைப்பை ஆட்டம் காணச் செய்வதுமாகும்.

## பெண் விடுதலை

சாதிய விடுதலையின் குறியீடாக வரும் சண்முகத்தின் மகள் காந்திமதி, நாவலின் இறுதிக் கட்டத்தில் பெண் விடுதலையின் அடையாளம் ஆகிறாள். பெண் விடுதலை குறித்துத் தோழர் விசுவநாதன் கூறும் கருத்துகள் அவள் மனதில் ஆழமாகப் பதிகின்றன. "அன்னிக்கிருந்த எத்தனையோ அநியாயம் போயிருக்கு. ஆனா ஒன்னு மட்டும் அப்பிடியே இருக்கு, அது பெண்ணடிமைத்தனந்தா. பெண்ணுக்குச் சமமா பொருளாதார சுதந்திரம், பொறுப்பில பங்கு, மரியாதை எல்லாம் உண்டு. உங்க சங்கிலிகளை நீங்கதா அறுத்துக்கிட்டு ஏன்னு கேக்கணும்" (சேற்றில் மனிதர்கள், பக்.211) என்று, பெண் நினைத்தால் மட்டுமே தன்னை அடக்கும் தளைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முடியும் என்பதை காந்திமதி மனதில் ஆழமாக விதைக்கிறார் விசுவநாதன்.

இதன் விளைவாக, குஞ்சிதம் எனும் பெண்ணைக் காவல்துறையினர் பொய்வழக்கில் கைது செய்து இரவில் காவல்நிலையத்தில் அடைத்து வைக்கையில், அதை எதிர்த்து ஊர்ப்பெண்களை ஒன்றுதிரட்டும் காந்திமதி காவல்துறைக்கு எதிராகப் போராட்டம் நடத்துகிறாள். "பொம்பிளைக்கு பொம்பிளையே எதிரியா நிக்காம நம்ம எனம்னு நெனைக்கனும். பொம்பிளன்னா, அவள எப்படியும் நசுக்கிடலான்னு இருக்கறத எல்லாரும் சேந்தா மாத்த முடியாதா? நாங்க பூச்சிங்க இல்ல, கொட்டுற தேளுன்னு காமிச்சா?" (மேலது, பக்.213) என்று அவள் பேசும் சொற்கள், ஊர்ப்பெண்களிடையே கனலை மூட்டுகின்றன.

தன் கணவனால் ஏமாற்றப்பட்டு, விபச்சாரத்திற்கு உள்ளாக்கப்படும் காந்திமதி, பல இன்னல்களைக் கடந்து, அவனிடமிருந்து தப்பித்து தோழர் விசுவநாதனிடம் அடைக்கலமாகிறாள். பலமுறை அவள் தப்பிக்க முயன்றபோதெல்லாம், அவள் கணவன் அவளை விபச்சாரத் தடைச்சட்டத்தில் சிக்க வைத்துவிடுவேன் என்று மிரட்டியதைக் கூறுகையில், பெண்ணை அடிமைப்படுத்தவே பெண்ணொழுக்கம் அவளது கற்பு நிலையை மட்டுமே சார்ந்தது என்று நம் சமூகம் கட்டமைத்துள்ளதைப் பற்றி விசுவநாதன் காந்திமதிக்குப் புரிய வைக்கிறார். "பெண்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு ஒடுக்குதற்குரிய நெறிகளாக ஒரு பக்க கற்பு நெறியும் கைமை நெறியுமே தீவிரமாக்கப்பட்ட நிலையை காண முடிகிறது" (ப.77, இந்திய சமுதாய வரலாற்றில் பெண்மை) என்று கூறுவதிலிருந்து, பெண்ணொழுக்கம் என்பது அவளது கற்புநிலையைச் சார்ந்தது அன்று எனும் நிலைப்பாட்டை இராஜம் கிருஷ்ணன் கொண்டிருந்ததை அறியமுடிகிறது.

## முடிவுரை

சாதிய வன்கொடுமைகளுக்கு எதிரான சட்டங்கள் நம் நாட்டில் இயற்றப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. சிவில் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 1955, தமிழ்நாடு நில உச்சவரம்புச் சட்டம் 1965, பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் 1989 உள்ளிட்ட சட்டங்கள் ஒடுக்கப்படும் மக்களின் பாதுகாப்பிற்காகவும், அவர்களின் கண்ணியமான வாழ்வை உறுதிப்படுத்தவும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. ஆயினும், இன்றும் இந்தியாவின் பல கிராமங்களில் பட்டியலின மக்கள் கடுமையான தீண்டாமைப் பழக்கங்களுக்கு உள்ளாக்கப்பட்டு, ஊர்ப்பொதுவில் வசிக்காமல் ஊருக்கு ஒதுக்குப்புறமாகவே குடிவைக்கப்படுகின்றனர். இம்மக்கள் பொதுக்கோயில் அருகே குடியிருக்கவும், கோயிலுள் நுழையவும் ஆதிக்க சாதியினரால் அனுமதி மறுக்கப்படுகிறது. பெரியாரிய இயக்கங்களும், கம்யூனிசத் தோழர்களும் இக்கொடுமைகளுக்கு எதிராக இன்றும் போராடி வருகின்றனர்.

எழுத்துக்கலையின் வழியாகவும் மக்களிடம் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்த இயலும், ஏற்படுத்த வேண்டும் என்று தங்களின் எழுத்தை சமூக மாற்றத்திற்கு வித்திடும் கருவியாகப் பயன்படுத்திய ஆளுமைகளுள் முக்கியமானவர் இராஜம் கிருஷ்ணன் அவர்கள் என்பதற்குச் சேற்றில் மனிதர்கள் நாவல் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

## References

இராஜம் கிருஷ்ணன், (1995) இந்திய சமுதாய வரலாற்றில் பெண்மை, சின்ன நிலா அச்சகம்.

இராஜம் கிருஷ்ணன், (2001) சேற்றில் மனிதர்கள், தாகம் பதிப்பகம்.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License